தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 மார்ச் 16, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.”

பொருள் வரும் வழிகளை உண்டாக்குதல், பெற்ற பொருள்களைச் சேர்த்தல், சேர்த்தவற்றைக் காத்தல், பகிர்ந்து கொடுத்தல் ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வதே உயர்ந்த அரசாகும்.

[குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை அளித்தல். (குறுக்கீடு)*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் பேரவைத் தலைவர் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தோம், அது என்னவாயிற்று ?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளின்படி இல்லை. (குறுக்கீடு) அது ஒன்றும் வழக்கம் இல்லை. இப்போது பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு மாண்புமிகு Governor permit செய்திருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, usual–ஆக அதை தற்போது அனுமதிப்பதில்லை. நீங்கள், நாளை மறுநாள் விவாதம் தொடங்கும் நாள் முதல் என்ன பேச வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அதைச் சொல்லுங்கள், பதிவு செய்துகொள்ளலாம். இன்றைக்கு ஒன்றும் வேண்டாம். (குறுக்கீடு) இல்லையில்லை. அது முறையல்ல. (குறுக்கீடுகள்) இருங்கள். இதற்கு முன்னர் மரபு இல்லை. நீங்கள் எதைப் பேசுவதாக இருந்தாலும், நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ அவை தொடங்கும்போது. . . (குறுக்கீடு) இல்லையில்லை, விதிகளின்படி நான் உறுதியாக எடுத்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டத்தொடரிலேயே எடுத்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், நீங்கள் இரண்டு கடிதங்கள் என்னிடம் கொடுத்திருக்கின்றீர்கள். முதல் கடிதத்தில் (குறுக்கீடு) முதல் கடிதத்தில், நீங்கள் விதிகளின்படி கொடுக்கவில்லை. அதில் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்றால், பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று சொல்லியிருக்கிறீர்கள். பேரவைத் தலைவர்மீது விதிகளின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாது. அதை நான் என்ன செய்யலாம் என யோசித்துக்கொண்டிருக்கும்போது, 9 ஆம் தேதி இன்னொரு கடிதத்தை விதிகளின்படி கொடுத்திருக்கிறீர்கள். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு எ.வ. வேலு மற்றும் முனைவர் க. பொன்முடி ஆகியோர் கொண்டுவந்து கொடுத்தார்கள். அன்றைக்கே அவர்களிடம் சொல்லிவிட்டேன், நான் இன்னும் அதில் முடிவெடுக்கவில்லை. இருந்தாலும், நீங்கள் இரண்டாவது கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். அந்த இரண்டாவது கடிதத்தின்படி, அதை நான் 14 நாட்கள் கழித்துத்தான் எடுத்துக்கொள்ள முடியும். நீங்கள் கொடுத்திருப்பதால், அதை நான் உறுதியாக எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். அந்த உறுதியை, உறுதியாக இந்தக் கூட்டத்தொடரிலேயே எடுத்து விவாதிக்க நான் ஏற்பாடு செய்வேன். அதைப்பற்றி, நீங்கள் கொடுத்திருக்கிற கடிதத்தைப் பற்றி, நான் ஒன்றும் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. உறுதியாக எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.